# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1657/26 - 2010 ජුනි 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.10

*1657/26 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் வெலிகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகிக்கொள்ளல் காரணமாக வெலிகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

ஹேவா வல்கமகே மஹிந்த குலதுங்க எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக் கட்சியைச் சேர்ந்தவரும், வெலிகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. நாவிமன லியனகே குலரத்ன என்பவர் மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார் ஆதலாலும்,

இப்போது வெலிகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கந்தஉட ஆரச்சிகே ஸுனெத் லோச்சன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. நாவிமன லியனகே குலரத்ன என்பவர், வெலிகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஸீ. ஏ. ஸுனெத் லோச்சன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வெலிகம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2010, யூன் 7.

6 - 584

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

***திரப்பனை பிரதேச சபை***

*திரப்பனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. சோமசாரகே திஸ்ஸ விஜேசிங்க என்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்துள்ளமையால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென திரப்பனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எஸ். எம். சமன் பந்துலசேன ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எஸ். எம். சமன் பந்துலசேன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*திரப்பனை பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*அநுராதபுரம்,*
*2010, மே 29.*

*6 - 585*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.